**<u>வாக்குமூலம்</u>**
**<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>**
**<u>வழக்கு எண் : SC.No.169/2024</u>**
**<u>வழக்கு சாட்சி PW-7</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மாரியப்பன் | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுகா | : | | வயது | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of June 10th, 2025.

**(1மற்றும் 2ம் எதிரிகள் ஆஜர். 3 மற்றும் 4 எதிரிகள் ஆஜரில்லை. 3 மற்றும் 4 எதிரிகள் தரப்பில் கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் பாம்புக்கோவில்சந்தையில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜர் மற்றும் அத்தாட்சியில் உள்ள முதலாவது கையெழுத்துக்கள் என்னுடையது தான். 29.05.2018ம் தேதி, இரவு சுமார் 09.45 மணியளவில் நானும், சாட்சி ராஜகுருவும் ரஹ்மானியா தெருவில் பேசிக்கொண்டிருந்தோம். அப்போது, காவல் ஆய்வாளர் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தார்கள். சம்பவயிடத்திலிருந்து அரிவாளை கைப்பற்றினார்கள். அவைகளில் நாங்கள் இருவரும் சாட்சிகளாக கையொப்பம் இட்டோம். அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.3. அத்தாட்சி அ.சா.ஆ.4. ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

**<u>1 மற்றும் 2 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>** –

மாலை 05.00 மணிக்கே போலீசார் ரஹ்மானியா தெருவிற்கு வந்துவிட்டார்கள் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பவத்தில் காயம் அடைந்த வள்ளியம்மாள் எனது பெரியம்மா. இராஜேஸ்வரி எனது அக்கா. நான் பார்வை மகஜர் மற்றும் அத்தாட்சியில் உள்ள கையெழுத்துக்களை காவல்நிலையத்தில் வைத்து போட்டுக்கொடுத்தேன் என்றால் சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் அழைப்பாணையில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அழைப்பாணையில் உள்ள கையெழுத்திற்கும், பார்வை மகஜர் மற்றும் அத்தாட்சியில் உள்ள கையெழுத்திற்கும் வித்தியாசம் உள்ளது என்றால் சரியல்ல. ஆய்வாளர் சம்பவயிடத்திலிருந்து அரிவாளை எடுத்து, அதை பொதிந்து சீல் வைத்தார் என்றால் சரியல்ல. பார்வை மகஜர் மற்றும் அத்தாட்சியில் என்ன எழுதியிருக்கிறது என்று எனக்கு தெரியும். ரஹ்மானியா தெருவில் மறைக்காயர் என்பவரது வீடு உள்ளது என்றால் சரிதான். மறைக்காயர் வீட்டிற்கு முன்பு, படிக்கட்டு, சுவர், திண்ணை ஆகிய இடங்களில் இரத்தக்கறை படிந்திருந்ததாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். போலீசார் வரும் போது, மறைக்காயர் வீட்டிலும், அதுபோல் எங்களுக்கு சொந்தக்காரர்கள் அல்லாத நிறைய ஆட்களும் அங்கு இருந்தார் என்றால் சரிதான். என்னுடன் கையெழுத்து செய்த இராஜகுரு கருப்பசாமி கோவில் தெருவைச் சேர்ந்தவர். போலீசார் வந்து எழுதியதற்காக ரஹ்மானியாபுரத்திலுள்ள வேறு ஆட்களிடமும் மற்றும் மறைக்காயர் வீட்டிலிருந்து ஆட்களிடமும் கையெழுத்துக்கள் வாங்கிக்கொண்டார்கள் என்றால் சரிதான். அங்கு வந்த போலீசார் மோப்பநாயை அழைத்து வந்தார்கள் என்றால் அதை நான் பார்க்கவில்லை. 29.05.2018ம் தேதி, இரவு 09.45 மணிக்கு ஆய்வாளர்

சமப்வயிடத்திற்கு வந்து டார்ச் லைட் அடித்து, இடத்தை பார்த்தார் என்று நான் முதல் விசாரணையில் கூறியது பொய் என்றால் சரியல்ல. 29.05.2018 ம் தேதி, மாலை 05.00 மணிக்கு போலீசார் கருப்பசாமி கோவில் தெருவில் குடியிருந்து வந்த வழக்கில் காயம்பட்ட இராஜேஸ்வரியின் வீட்டிற்கு போய் பார்வையிட்டு, அதை எழுதிக்கொண்டார்கள் என்றால் அது எனக்கு தெரியாது. இராஜேஸ்வரியின் வீட்டிற்கு போலீசார் சென்றதாக சொல்லிக்கொண்டார்கள் என்றால் சரிதான். 29.05.2018 ம் தேதி, இரவு 09.45 மணிக்கு போலீசார் சம்பவயிடத்தை பார்வையிட்டதாக நான் பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> –

நான் ரஹ்மனியா தெருவில் குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான். எதிரிகளும் எனது உறவினர்கள் தான்.

<u>1 மற்றும் 2 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> –

போலீசார் விசாரிக்கும் போது, நான் பாம்புக்கோவில்சந்தை, காளியம்மன் கோவில் தெருவில் குடியிருந்ததாக குறிப்பிட்டேன் என்றால் சரிதான். நான் ரஹ்மானியா தெருவில் சம்பவத்தின் போது குடியிருந்து வந்ததாக குறிப்பிடுவது பொய் என்றால் சரியல்ல.

**(3 மற்றும் 4 எதிரிகள் தரப்பில் 1 மற்றும் 2 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்பட்டது.)**

<u>மறுவிசாரணை</u> –

இல்லை.

C KATHIRAVAN
Digitally signed by C KATHIRAVAN
Date: 2025.06.10 16:18:30 +0530